## நடைபெற உள்ள மழைக்கால கூட்டத் தொடரில் ஒன்றிய அரசு கொண்டுவரவுள்ள

# பிரதமர், முதல்வர், அமைச்சர்களின் பதவியை நீக்கும் புதிய சட்ட திருத்தத்திற்கு மீண்டும் எதிர்ப்பு!

## நாடாளுமன்ற கூட்டுக் குழு 17–ஆம் தேதி இறுதி அறிக்கை தாக்கல்!

புதுடெல்லி, ஜூலை 6-

நாடாளுமன்றத்தின் மழைக் கால கூட்டத்தொடர் தொடங்க உள்ள நிலையில் ஒன்றிய அரசு கொண்டு வரவுள்ள 130வது அரசியலமைப்பு சட்ட திருத்த மசோதா விற்கு எதிராக மீண்டும் எதிர்க் கட்சி கள் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றன.

நாடாளுமன்றத்தின் இந்த ஆண்டுக்கான மழைக் கால கூட்டத்தொடர் வரும் 20ம் தேதி தொடங்கி, ஆகஸ்ட் 13-ஆம் தேதி வரை நடைபெற வாய்ப்புள்ளதாகத் தெரிகிறது. இந்தத் தற்காலிக கால அட்ட வணை குறித்த முறையான பரிந்துரை, நாடாளுமன்ற விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு வின் தீவிரப் பரிசீலனை யில் உள்ளது.

இக்குழுவின் ஒப்புதல் கிடைத்தவுடன் இதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும். சுமார் மூன்று வாரங்கள் நடைபெற உள்ள இந்த மழைக்கால கூட்டத்தொடரில் இரு அவைகளும் மொத்தம் 20 அமர்வு களாகக் கூடிப் பல்வேறு விவாதங் களை நடத்தத் திட்டமிட்டுள்ளன.

**ஒன்றிய அரசின் மசோதாக்கள்!**

இந்தக் கூட்டத்தொடரின் போது, பெண்களுக்கான இடஒதுக்கீட்டை அமல்படுத்துவது தொடர்பான திருத் தப்பட்ட புதிய அரசியலமைப்புச் சட்டத் திருத்த மசோதாவைத் தாக்கல் செய்ய ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளது. முன்னதாக நாடாளுமன்றத்தின் மழைக்கால கூட்டத் தொடரின்போது, 2025ம் ஆண்டு ஆகஸ்ட் 20ம் தேதி லோக்சபாவில் 130வது அரசியலமைப்பு சட்டதிருத்த மசோதாவை ஒன்றிய உள் துறை அமைச்சர் அமித்ஷா தாக் கல் செய்தார்.

இந்த புதிய மசோதாவின்படி, ஐந்து ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட சிறைத் தண்டனை விதிக்கப்படக்கூடிய குற்ற வழக்குக ளில் கைது செய்யப்பட்டு, தொடர்ந்து 30 நாட்கள் நீதிமன்றக் காவலில் வைக்கப்படும் பிரதமர், முதல்வர் அல்லது ஒன்றிய மற்றும் மாநில அமைச்சர்களை பதவியில் இருந்து நீக்க வழி வகை செய்யப்பட் டுள்ளது.

புதுச்சேரி மற்றும் ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேசங்களுக்கும் இதே போன்ற விதிகளைப் பயன் படுத்துவதற்காக மேலும் இரு துணை மசோதாக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த மசோதாவை ஆராய்ந்து வரும் நாடாளுமன்றக் கூட் டுக் குழு (ஜேபிசி) தனது இறுதி அறிக்கையை வரும் 17ம் தேதி தாக்கல் செய்ய உள்ளது.

இந்த சட்ட திருத்த மசோதாவுக்கு நாடு முழுவதும் உள்ள எதிர்க்கட்சி கள் ஒன்றிணைந்து மீண்டும் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. இதுகுறித்து திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் எம்பி சாகரிகா கோஷ் கூறுகையில், 'இந்த 130வது அரசியலமைப்பு சட்ட திருத்த மசோதா என்பது எதிர்க்கட்சிகளுக்கு எதிராக மோடி அரசு ஏவியுள்ள ஒரு ஏவுகணையாகும். நீதிமன்றத்தால் குற்றவாளி என்று நிரூபிக்கப்படுவதற்கு முன்பாகவே, வெறும் 30 நாட்கள் நீதிமன்றக் காவலில் இருந்தார் என் பதற்காக மக்களால் தேர்ந்தெடுக் கப்பட்ட ஒரு பிரதமர் அல்லது முதல் வரை பதவியில் இருந்து நீக்குவது ஜனநாயகத்தின் அடிப்படைக்கே எதிரானது.

**புனையப்பட்ட அமைப்பு மூலம் எதிர்க்கட்சிகளுக்கு மிரட்டல்!**

குற்றம் நிரூபிக்கப்படும் வரை ஒருவர் நிரபராதி என்ற குற்றவியல் சட்டத்தின் அடிப்படை விதியை இந்த மசோதா முற்றிலும் சிதைக்கி றது. தங்களுக்கு அடிபணிந்து செயல்படும் புலனாய்வு அமைப்பு கள் மூலம் எதிர்க்கட்சித் தலை வர் களை நீண்ட நாட்கள் காவலில் வைத்து, மாநில அரசுகளைக் கலைக்கவே இந்த சதித்திட்டம் தீட் டப்பட்டுள்ளது' என்று குற்றம் சாட்டி யுள்ளார்.

மேலும் ஆம் ஆத்மி கட்சியின் மூத்த தலைவர் சோம்நாத் பாரதி இதுகு றித்து கூறுகையில், 'ஆளும் பா.ஜ.க. அரசு தங்களுக்கு எதிரான அரசியல் கணக் குகளைத் தீர்த்துக் கொள்ளவும், தங்களின் கொள்கை களுக்கு அடிபணிய வைக்கவும் அமலாக்கத்துறை, சிபிஐ, வரு மான வரித்துறை மற்றும் போலீ சார் உள்ளிட்ட தங்களின் கட்டுப் பாட்டில் உள்ள புலனாய்வு அமைப்புகளைத் தவறாகப் பயன்ப டுத்தி வருகிறது. இதற்கு சிறந்த உதாரணம் அரவிந்த் கெஜ்ரிவால் ஆவார். அவர் எந்த ஆதாரமும் இல்லாமல் கைது செய்யப்பட்டு 6 மாதங்கள் சிறையில் அடைக்கப் பட்டார்.

இறுதியில் அந்த வழக்கில் எந்த உண்மையும் இல்லை என்று நீதி மன்றம் அவரை விடுவித்தது. இந்த புதிய மசோதா என்பது பாஜக அல் லாத மாநில அரசுகளைக் கவிழ்க் கத் திட்டமிட்டு கொண்டு வரப்படும் ஆபத்தான முயற்சியாகும்' என்று விமர்சித்துள்ளார்.

இத்தகைய கடுமை யான காரணங்களால் பல எதிர்க்கட்சிகள் இந்த நாடாளுமன்ற கூட்டுக் குழு வின் கூட்டங்களைப் புறக்கணித்து வருகின்றன. குற்றம் சாட்டப்பட்ட வர் நிரபராதி என்று நிரூபிக்கப்படும் வரை அவர் குற்றமற்றவர் என்ற சட்டத்தின் அடிப்படை உரிமையைப் பறிக்கும் இந்த மசோதா, ஜனநாயகத்தை அடியோடு அழித் துவிடும் என்று எதிர்க்கட்சிகள் அஞ் சுகின்றன.

இந்த மசோதாவில் பிரதமர் பதவியும் சேர்க்கப்பட்டுள்ளது என்பது, இது ஒரு நடுநிலையான சட்டம் போன்ற தோற்றத்தை ஏற்படுத்துவதற்காகச் செய்யப்பட்ட ஒரு தந்திரமான வேலையே தவிர, உண்மை யில் இது எதிர்க் கட்சித் தலைவர்களை மட்டுமே குறி வைத்து அழிக்கப் பயன்படும் என்று அவர்கள் எச்சரித்துள்ளனர்.

**எதிர்க்கட்சிகளின் வியூகம்!**

அதே நேரத்தில், வரும் மழைக் கால கூட்டத் தொடரின் போது நாட் டில் நிலவி வரும் பணவீக்கம், தேசிய தேர்வுகளில் நடந்த வினாத்தாள் கசிவு பிரச்சினை, அயோத்தி ராமர் கோயில் நன் கொடை பணம் திருட்டு மற்றும் பிராந்திய பாதுகாப்பு நிலவரங்கள் போன்ற முக்கிய விவகாரங்களை எழுப்பி, ஒன்றிய அரசுக்குக் கடும் நெருக்கடி கொடுக்க எதிர்க்கட்சிகள் தங்களின் வியூகங்களை வகுத்து வருகின்றன.

---

# கோவையில் எடை அதிகமாக ஏற்றி வரும் லாரிகள் மீது புகார் அளிப்போம்!

## செங்கல் லாரி உரிமையாளர்கள் சங்கத்தினர் தகவல்!

கோவை, ஜூலை. 6-

அரசு நிர்ணயித்த எடையில் மட்டுமே இனி லாரிகளை இயக்க வேண்டும், எடை அதிகமாக ஏற்றி வரும் லாரிகள் மீது நடவடிக்கை எடுக்க கோரி நாங்களே புகார் மனு அளித்து வலியுறுத்துவோம் என்று கோவை மாவட்ட செங்கல் லாரி உரிமையாளர்கள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

கோவை மாவட்டத்தில் தடாகம், சின்னதடாகம், வீரபாண்டி, சோமையம் பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் தான் 100க்கணக்கான செங்கல் சூளைகள் செயல்பட்டு வருகின்றன. இந்த சூழலில் தடாகம் பகுதியில் இயங்கும், கோவை மாவட்ட செங்கல் லாரி உரிமையாளர்கள் சங்கத்தினர் செய்தியாளர்களை சந்தித்தனர்.

அப்பொழுது சங்க நிர்வாகிகள், பரசுராமன், செந்தில் குமார், தமிழரசன், தினேஷ் குமார் ஆகியோர் கூட்டாக கூறுகையில், “கோவை மாவட்ட செங்கல் லாரி உரிமையாளர்கள் சங்கத்தின் சார்பாக, 4, 5 மற்றும் 6ம் தேதி என மூன்று நாட்கள் அடையாள வேலை நிறுத்த போராட்டத்தை நடத்த உள்ளதாகவும், இதில் சுமார் 300க்கும் மேற்பட்ட லாரிகள், கோவை மாவட்டத்தில் மட்டும் வேலை நிறுத்தம் செய்ய உள்ளதாகவும், இதனால் ஒரு நாளைக்கு 18 லட்சம் இழப்பு ஏற்படும் என்ற நிலை உள்ளது.

மேலும் இந்த தொழிலை நம்பி, உள்ள சுமார் 3000த்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களின் வாழ்க்கை பாதிக்கும் நிலை உள்ளது. இந்த போராட்டம் நடத்த முக்கிய காரணம் அதிக எடையுடன் செங்கல்கள் ஏற்றி வரும் லாரிகளுக்கு அதிக அளவில் காவல்துறையினர் அபராதம் விதிக்கின்றனர். ஆர் டி ஓ அதிகாரிகள் லாரிகளை சிறை பிடிக்கின்றனர். இதனால் லாரி உரிமையாளர்கள் கடுமையாக பாதிக்கப் படுகின்றனர்.

இதனால் அரசு நிர்ணயித்த எடையின் அளவில் லாரிகளை இயக்க உள்ளனர். ஜிஎஸ்டி பில் இல்லாமல் செங்கல்களை விற்பனை செய்யும் நிறுவனங்களில் இருந்து செங்கல்களை வாங்க மாட்டோம். வேலை நிறுத்த நாட்களில் செங்கல்கள் உற்பத்தியாகிறது. சேலம், பழநி, தாராபுரம், தூத்துக்குடி, உள்ளிட்ட பகுதிகளில் வெளிமாவட்ட லாரிகள் வருகின்றன. எங்களது போராட்ட நாட்களில், லாரிகள் வந்தால் அதனை சிறைப் பிடித்து காவல்துறையினரிடம் ஒப்படைக்க உள்ளோம் என்றனர். எங்களது சங்கத்தின் இந்த கோரிக்கையை ஏற்று, பல்வேறு மாவட்ட லாரி உரிமையாளர்கள் ஒத்துழைப்பு வழங்கி உள்ளதாகவும் தெரிவித்தனர்.

மேலும், வெளி மாவட்டங்களில் உள்ள சேம்பர் உற்பத்தியாளர்கள், செங்கல் விலையை குறைக்க வேண்டும்.. அதிக விலைக்கு செங்கல்களை விற்பனை செய்வதால் கட்டுமான தொழில் பல்வேறு பாதிப்புகளுக்கு உள்ளாகிறது. டீசல் விலை உயர்வு, உதிரி பாகங்கள் விலை உயர்வு, சாலை வரி உயர்வு, உள்ளிட்ட பல்வேறு இடையூறுகளை சந்தித்து வருவதால், இத்தகைய போராட்டத்தை நடத்த உள்ளோம்”

இவ்வாறு கூறினார்கள்.

---

# பள்ளி ஆசிரியர்களுக்கான சிறப்பு தேர்வு - 61,386 பேர் எழுதினர்!

சென்னை, ஜூலை. 6-

பள்ளி ஆசிரியர்களுக்கான சிறப்பு ஆசிரியர் தகுதித் தேர்வில் நேற்று முன்தினம் நடந்த இடைநிலை ஆசிரியர்களுக்கான தேர்வை தமிழகம் முழுவதும் 61,386 பேர் எழுதினர். பட்டதாரி ஆசிரியர்களுக்கான தேர்வு நேற்று நடைபெற்றது. பள்ளி ஆசிரியர்கள் டெட் தேர்வில் கட்டாயம் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. டெட் தேர்வில் தகுதி பெறாமல் பணியில் உள்ள ஆசிரியர்கள் 2 ஆண்டுகளில் தகுதி பெற வேண்டும் எனவும், ஓய்வு பெற 5 ஆண்டு மட்டும் உள்ளவர்களுக்கு தளர்வும் வழங்கப்பட்டது. இதுமட்டுமின்றி தேர்ச்சி பெறாதவர்கள் அல்லது பெற விரும்பாதவர்கள் பணியில் இருந்து கட்டாய ஓய்வு பெற வேண்டும் என தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, தமிழகத்தில் அரசு, அரசு உதவிபெறும் பள்ளிகளில் பணியாற்றும் லட்சக் கணக்கான ஆசிரியர்கள் தகுதி தேர்வில் தேர்ச்சி பெற வேண்டிய நிலை ஏற்பட்டது. அதனால், ஆசிரியர்களின் வசதிக்காக 3 சிறப்பு ஆசிரியர் தகுதி தேர்வு நடத்தப்படும் என்று பள்ளிக் கல்வித் துறை அறிவித்தது. அந்த வகையில் பள்ளிகளில் பணியாற்றி வரும் ஆசிரியர்களுக்கான முதல் சிறப்பு டெட் தேர்வு ஜூலை 4, 5ம் தேதிகளில் நடைபெறும் என ஏற்கனவே அறிவிக்கப் பட்டது. இந்நிலையில், நேற்று நடைபெற்ற இடைநிலை ஆசிரியர்களுக்கான சிறப்பு டெட் முதல் தாள் தேர்வை 61,386 பேர் எழுதினார்கள். இந்த தேர்வை தமிழகம் முழுவதும் 222 மையங்களில் 61,386 தேர்வர்கள் தேர்வு எழுதினார்கள். இதில் ஆண் தேர்வர்கள் 12,001, பெண் தேர்வர்கள் 49,385 ஆவர். இதில் 1,321 தேர்வர்கள் மாற்றுத்திறன் கொண்டவர்கள். இந்த மாற்றுத்திறனாளிகளில் 126 மாற்றுத்திறனாளிகள் சொல்வதை எழுத உதவியாளர்கள் நியமனம் செய்யப்பட்டனர். குறிப்பாக சென்னையில் மட்டும் 13 மையங்களில் 3575 பேர் தேர்வு எழுதினர்.

---

## அமைச்சரின் போதைப்பொருள்

# வீடியோ வெளியிட்டதாகக் கூறி மிரட்டப்பட்டவர் திடீர் கைது!

சென்னை, ஜூலை 6 -

பொது இடத்தில் போதைப்பொருள் பயன்படுத்திய த.வெ.க. அமைச்சர் சரத்குமாரின் வீடியோவை வெளியிட்டதாக மிரட்டப்பட்ட அவரது நண்பர் சரண் ஜெயராமனை மற்றொரு பொய் வழக்கில் காவல் துறையினர் கைது செய்துள்ளனர்.

ஐ.பி.எல் போட்டியின் போது அமைச்சர் சரத்குமார் செல்போனில் ஏ.டி.எம் கார்டை வைத்து போதைப் பொருளை நசுக்குவது போன்ற வீடியோ சமூக வலைதளங்களில் வைரலானது. இந்த விவகாரத்தால் அமைச்சர் சரத்குமாரை பதவி நீக்கம் செய்யக் கோரி திமுக சார்பில் தமிழகம் முழுவதும் போராட்டங்கள் நடைபெற்றன.

அமைச்சர் சரத்குமாரின் நண்பர் சரண் ஜெயராமன் இந்த வீடியோவை வெளியிட்டதாக த.வெ.க.வினர் கூறி வருகின்றனர். தனக்கும் தனது குடும்பத்திற்கும் அமைச்சர் ஆதரவாளர்களால் ஆபத்து உள்ளதாகக் கூறி, சரண் ஜெயராமன் தாம்பரம் காவல் ஆணையரிடம் இரு தினங்களுக்கு முன் புகார் அளித்திருந்தார். அமைச்சர் சரத்குமாரின் ஆதரவாளர்கள் கத்தியுடன் வந்து தன்னை மிரட்டுவதாகவும் அந்த புகாரின் சரண் ஜெயராமன் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், போதைப் பொருள் வீடியோவை அம்பலப்படுத்தியதால் பழி வாங்கும் நடவடிக்கையாக மற்றொரு பொய் வழக்கில் சரண் ஜெயராமனை போலீசார் நேற்று அதிகாலை கைது செய்தனர். தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து கொலை, கொள்ளை, பாலியல் வன் கொடுமைகள் அதிகரித்துள்ளதை வேடிக்கை பார்க்கும் த.வெ.க. அரசு, தங்களை விமர்சிப்பவர்களையும், தங்களின் உண்மை முகத்தை யும் அம்பலப்படுத்துபவர்களையும் பழிவாங்கும் நோக்கில் கைது செய்வதாக விமர்சனங்கள் எழுந்துள்ளன.

---

## அயோத்தி ராமர் கோயிலைத் தொடர்ந்து

# பத்ரிநாத் கோயிலிலும் காணிக்கை திருட்டு புகார்!

புதுடெல்லி,ஜூலை,6–

அயோத்தி ராமர் கோயிலை தொடர்ந்து, பத்ரிநாத் கோயிலிலும் காணிக்கை திருடப்பட்ட தாக புகார் எழுந்துள்ளது.

உத்தராகண்ட் மாநிலத்தின் 4 முக்கியப் புனிதத் தலங்களில் ஒன்றான பத்ரிநாத்தில் உள்ள விஷ்ணு கோயில் உள்ளது. கடந்த 2025ல் 51 லட்சத்துக்கும் அதிகமான பக்தர்கள் இக்கோயிலுக்கு வருகை தந்துள்ளனர்.இந்தக் கோயிலை பத்ரிநாத்கேதார்நாத் கோயில் கமிட்டி (பிகேடிசி) நிர்வகித்து வருகிறது. இந்நிலையில் பிகேடிசி தலைவரின் தனிப்பட்ட செயலாளர் மீது பைரவ் சேனா எனும் ஆன்மிக அமைப்பு தீவிர குற்றச்சாட்டுகளை முன் வைத் துள்ளது.

இது தொடர்பாக விசாரணை கோரி பிகேடிசியின் தலைமை நிர்வாக அதிகாரி சோஹன் ரங்கத்திடம் பைரவ் சேனாவின் நிறுவனத் தலைவர் சந்தீப் கத்ரி மனு அளித்துள்ளார்.

அந்த மனுவில் பத்ரிநாத் கோயில் காணிக்கையில் முறைகேடுகள் மற்றும் நிதி கையாடல் நடந்துள்ளதாகவும் எனவே சம்பந்தப்பட்ட ஊழியரின் பங்கு குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

இதுகுறித்து பிகேடிசி தலைவர் ஹேமந்த் திவேதி கூறுகையில், ”சமூக ஊடகங்களில் குறிப்பிடப்படும் நபர் உண்மையில் எனது தனிப்பட்ட செயலாளர் அல்ல. அவர் பத்ரிநாத்கேதார்நாத் கோயில் கமிட்டியின் ஒரு சாதாரண அரசு ஊழியர். இதற்கு முன்பு அவர் மூன்று கோயில் கமிட்டித் தலைவர்களிடம் தனிப்பட்ட உதவியாளராகப் பணியாற்றியுள்ளார். இவர் மீதான குற்றச்சாட்டுகள் உண்மையானவை எனத் தெரிந்தால் அவர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப் படும்.

இந்த விசாரணைக்காக ஒரு குழுவை அமைக்கவும் கோவில் நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது. அப்புகாரின் அடிப்படையில், பத்ரிநாத் கோயில் வளாகம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள சிசிடிவி கேமராக்களின் காட்சிகளும் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன என்றார்.

இந்த விவகாரத்தில் பத்ரிநாத் கேதார்நாத் கோயில் ஊழியர்கள் கூட்டமைப்பும் சில முன்னெடுப்புகளை மேற்கொண்டுள்ளது. இச்சம்பவம் குறித்து வெளிப்படையாக விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று சங்கத்தின் தலைவர் விஜேந்திர பிஷ்ட், கோயில் குழுவுக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

---

## முத்துப்பேட்டை ஒன்றியம்

# மாங்குடி கீனா என்கிற கிருஷ்ணமூர்த்தி மறைவு!

### கழகத்தினர் அஞ்சலி!



திருவாரூர், ஜூலை. 6-

திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை ஒன்றியம், மாங்குடி ஊராட்சியைச்சேர்ந்த திராவிட முன்னேற்றக்கழகத்தின் மூத்த முன்னோடியும், “கீனா” என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்ட மாங்குடி, ஆர். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

மறைந்த கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கழகத்தின் ஆரம்ப கால உறுப்பினர் ஆவார். தலைவர் கலைஞர் அவர்கள் மீதும், திராவிடநாயகர் தளபதி அவர்கள் மீதும் மாறாப்பற்றுகொண்டிருந்த இவர், வட்டக்கழகம் ,கிளைக் கழகம் என கழகத்தின் பல்வேறு பொறுப்புகளில் தொடர்ந்து இருந்து கழகப் பணி ஆற்றியவராவார். குறிப்பாக தேர்தல் பணிகளின் முனைப்போடு ஈடுபடும் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அனைவரிடத்திலும் அன்போடு பழகுபவர். இவருக்கு கோப்பருந்தேவி, தமிழரசி என்கிற மகள்கள் உள்ளனர்.


மறைந்த கிருஷ்ணமூர்த்தி அவர்களின் இறுதி ஊர்வலம் 5.07.2026 ஞாயிறு அன்று மாங்குடி அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டது. அன்னாரின் மறைவின் தகவல் அறிந்த மாவட்டக் கழக செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. , ஒன்றியச் செயலாளர் இரா. மனோகரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகளும், கழக தோழர்களும் அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே.கே. பலராமன்

**ஜூலை 6 (2015)**



**திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு ஒன்றியச் செயலாளராக நான்கு முறையும், பொதுக்குழு உறுப்பினராகவும், மாவட்டப் பொருளாளராகவும், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளராகவும் பொறுப்பேற்று கழகப் பணியாற்றியவர்.**

**கொருக்காத்தூர் ஊராட்சி மன்றத் தலைவராக நான்கு முறையும், செய்யாறு ஒன்றிய துணைத் தலைவராகவும், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினராகவும், ஒன்றியக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்து அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**